**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : S. T. C. No. 509/2024**

**Defense Witness : D. W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 23/01/2026

Complainant Present.

**குறுக்கு விசாரணை (புகார்தாரர் தரப்பில்)**

நான் செங்குன்றத்தில் அரிசி கமிஷன் ஏஜெண்டாக உள்ளேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால், 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் அரிசி கமிஷன் ஏஜெண்ட் ஆக எவ்வளவு நாட்களாக செய்கிறேன் என்றால், 12 வருடமாக செய்கிறேன். அரிசியை மொத்தமாக விற்பனை செய்பவர்களிடமிருந்து வாங்கி நான் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறேன் என்றால், சரியல்ல. அரிசி மூட்டையை வாங்கியதற்காக நான் வழக்கு காசோலை கொடுத்திருக்கிறேன் என்றால், சரியல்ல. காசோலையை வழங்கிவிட்டு அதிலிருந்து தப்பிக்கவே தற்போது ஏஜெண்ட் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறேன் என்றால், சரியல்ல. வழக்கிலிருந்து தப்பிக்கவே ஏஜெண்டாக நான் செயல்படுகிறேன் என்றும், ஒரு மூட்டைக்கு ரூ.12 கமிஷன் பெறுகிறேன் என்று பொய்யாக பிரமாணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. வெற்று தாளில்/பத்திரத்தில் கையெழுத்து போடுவது சரியா, தவறா என்றால், பொறுப்புறுதிக்காக அவ்வாறு கொடுப்பார்கள். வெற்று தாளில்/பத்திரத்தில் கையெழுத்து

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

போடுவது சரியா, தவறா என்பது எனக்கு தவறு என்று தெரியும் என்றால், வியாபாரத்தில் அவ்வாறு கொடுப்பார்கள். பிரமாணத்தில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் என்னுடைய பொறுப்புகளில் இருந்து தப்பிப்பதற்காகவே சொல்லியிருக்கிறேன் என்றால், சரியல்ல. புகார்தாரருக்கு கைப்பட எழுதி காசோலை கொடுத்தேன் என்றால், கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்தேன். பெயர் மற்ற விவரங்கள் பூர்த்தி செய்யாமல் கொடுத்தேன்.

வெற்று காசோலையில் எதுவும் நிரப்பாமல் கையெழுத்து மட்டும் போட்டு கொடுப்பது சரியா என்றால், பொறுப்புறுதிக்காக கொடுத்தேன். புகார்தாரரை ஏமாற்றும் நோக்கத்தில் காசோலை கொடுத்து ஸ்டாப் பேமெண்ட் அறிவுறுத்தலும் வழங்கியிருக்கிறேன் என்றால், சரியல்ல. அதனை தொடர்ந்து வழக்கறிஞர் அறிவிப்பும் புகார்தாரரை மிரட்டவே அனுப்பியிருக்கிறேன் என்றால், சரியல்ல. இதே போல் நான் வியாபாரத்தில் பலருக்கும் காசோலைகள் கொடுத்து ஏமாற்றியிருக்கிறேன் என்றால், சரியல்ல. பணம் இல்லாமல் காசோலை மட்டும் வழங்கி அதனால் பாதிப்படைந்த பலர் இதே நீதிமன்றத்திலும், வேறு நீதிமன்றங்களிலும் பல வழக்குகள் என் மீது தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால், சரியல்ல. இது என்னுடைய தொழிலாகவே இருக்கிறது என்றால், சரியல்ல. என்னுடைய பிரமாணத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்பதால், எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றால், சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA